சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – வேலூார் மாவட்டம், வாலாஜா வட்டம், பொய்னி அணைக்கட்டில் ஒய்வு அறையுடன் கூடிய பிரிவு அலுவலகக் கட்டிடம் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி – நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ட்டி1) துறை

அரசாணை (நிலை) எண். 139 நாள் 4.8.2009.

ஆடி 19
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்க:–

தலைமைப் பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, கடித எண்.எப்/9000/2008, நாள்.20.1.2009

-----

ஆணை:

நீர்வள ஆதாரத் துறை, திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் அவர்கள் பார்வையில் படிக்கப்பட்ட அவருடைய கடிதத்தில், வேலூார் மாவட்டம், வாலாஜா வட்டம், பொய்னி அணைக்கட்டில் ஒய்வு அறையுடன் கூடிறய பிரிவு அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார். வேலூார் மாவட்டம், வாலாஜா வட்டம், பொய்னி அணைக்கட்டில் உள்ள பிரிவு அலுவலகக் கட்டிடம் 1897ம் ஆண்டு கட்டப்பட்டது என்றும், இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது என்றும், இப்பிரிவு அலுவலகத்தில் ஏரிகள், வழங்கு வாய்க்கால் மற்றும் அணைக்கட்டுகள் ஆகியவற்றின் பராமரிப்பு பணிகள் போன்ற அனைத்து பாசன பணிகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாலும், இப்பிரிவு அலுவலகம் மிகவும் முக்கியமான பிரிவுகளுள் ஒன்றாகும் என்பதால் ஒய்வு கூடத்துடன் கூடிய பிரிவு அலுவலகக் கட்டிடம் ஒன்று அவசியமாக உள்ளது என்றும் 2009–2010ம் ஆண்டு விலைவிகிதப்படி இதன் மதிப்பீடு ரூ.9.00 இலட்சங்கள் ஆகும் எனவும் தெரிவித்துள்ளார். இத்திட்டப்பணி நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்படும் என்பதால், இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட பணியினை 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. இதனடிப்படையில், 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் வேலூார் மாவட்டம், வாலாஜா வட்டம், பொய்னி அணைக்கட்டில் ஒய்வு அறையுடன் கூடிய பிரிவு அலுவலகம் கட்டும் பணியினை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் (2009–2010ம் ஆண்டு விலைவிகிதப்படி) மேற்கொள்ள அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக, சில்லறை செலவினங்கள், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள், மொத்த பணி(Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது

3. மேலே பத்தி 2ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4701 – பெரிய நடுத்தர பாசன திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு– 03 நடுத்தர பாசனம் வணிகத் தன்மை வாய்ந்தது–380–பொதுப்பணித்துறை நீர் ஆதார அமைப்பின் கீழ் அலுவலகக் கட்டிடம் கட்டுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்ட பணிகள் II மாநில திட்டம்–JF. வேலூா் மாவட்டம், வாலாஜா வட்டம், பொய்னி அணைக்கட்டில் பிரிவு அலுவலகக் கட்டிடத்தோடு கூடிய ஓய்வு கூடம் கட்டும் பணி .16 பெரும் பணிகள்" (து.தொ.கு. 4701–03–380–JF –1605)".

4. தலைமைப் பொறியாளா், நீா்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் அவா்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு, அனுமதித்த தொகைக்குள், குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும், திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அரசுக்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறாா்.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.குறிப்பு எண்.33014/பொ.ப.II/2009 நாள்.17.6.2009ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளா்.

பெறுநா்
முதன்மைத் தலைமைப்பொறியாளா் நீா்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளா் (பொது),
சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளா், நீா்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம், சென்னை–5.
தலைமைப்பொறியாளா்(திட்ட உருவாக்கம்),
நீா்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
மாவட்ட கருவூல அலுவலா், வேலூா்
மாநில கணக்காயா், சென்னை.18/35
<u>நகல்</u>
நிதி (பொ.ப.II/வ.செ.பொ.II)துறை, சென்னை.9
பொ.ப.(சி.பா.1) துறை, சென்னை 9 (5 நகல்கள்).
இ.கோ /உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலா்